# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2373/43 - 2024 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2024.03.01

*2373/43 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 4/ 2007*

**1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டம்**

*1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் பிரிவு 19(1)(அ) மற்றும் (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 49(1)(அ), (2) மற்றும் (3) இன் கீழ் ஆயுர்வேத மருத்துவப் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
ஆயுர்வேத மருத்துவப் பேரவை.

கொழும்பு,
2024, பெப்புருவரி 07.

**விதிகள்**

1. இவ்விதிகள், 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, ஆயுர்வேத அலுவலர்கள் மற்றும் சேவையாளர் (சேவை பற்றிய நிபந்தனைகள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**ஆயுர்வேத மருத்துவப் பேரவைக்கான பதிவாளர்**

2. (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின் பிரிவு 19(1)(அ) ஆம் பிரிவின் கீழ் பேரவைக்கான பதிவாளராக ஆயுர்வேத மருத்துவப் பேரவையினால் நியமிக்கப்படும் ஆள்,

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பேரவையினால் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவத் தொழிலர் ஒருவராக இருத்தல் வேண்டும் ;


1A - PG 6661 — 05 (2024/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) (i) ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை மானி (ஆ.ம.ம.அ.மா) ;

(ii) சித்த மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை மானி (சி.ம.ம.அ.மா) ;

(iii) யூனானி மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை மானி (யூ.ம.ம.அ.மா) ;

(iv) சித்த ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சையில் திப்புளோமா (சி.ஆ.ம.அ.சி.தி) ; அல்லது

(v) சித்த ஆயுர்வேத சான்றிதழில் திப்புளோமா (சி.ஆ.சா.தி),

என்பவற்றில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இணைந்த நிறுவகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட, ஒன்றில் பகிரங்க சேவையில் அல்லது வேறு ஏதேனும் சேவையில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட ஆயுர்வேத மருத்துவத் தொழிலர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(உ) அத்தகைய சேவையில் பதினைந்து வருடங்கள் தகைமைபெற்ற பின்னரான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) சிங்களம், தமிழ் மொழியில் மற்றும் ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராயிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆங்கில மொழியில் மேலதிகத் தகைமைகளும் இருத்தல் வேண்டும்.

(எ) நியமனத் திகதியன்று ஐம்பது வயதிற்கு குறையாதவராகவும், அறுபது வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பதிவாளராக நியமிக்கப்பட்ட ஆள், சிறந்த ஒழுக்கப் பண்புடைய ஆள் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஐந்து வருட உடன்முற்போந்த காலப்பகுதிக்கு திருப்திகரமான தொழிலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. பேரவைக்கான பதிவாளர் -

(அ) பேரவையின் செயற்பாடுகளுடன் அக்கறை முரண்பாட்டைக் கொண்டிருத்தல் ஆகாது ;

(ஆ) ஆயுர்வேத மருத்துவத் தொழிலர் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தனியார் நிறுவனத்தின் தொழிற்பாட்டில் தொழிற்படுதலோ அல்லது தொடர்புபடுத்துதலோ ஆகாது ;

(இ) ஆயுர்வேத மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலை, சந்தைப்படுத்துதலை அல்லது விநியோகித்தலை ஒன்றில் தானே சொந்தமாக அல்லது வேறு எவரேனும் ஆளுடன் இணைந்து ஈடுபடுதலாகாது ;

(ஈ) எவையேனும் ஆயுர்வேத அவுடதப் பொருட்களின் விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அத்தகைய தொழிலை மேம்படுத்துகின்ற ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஏதேனும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு கம்பனிக்கு ஆலோசகராக சேவையாற்றுதல் ஆகாது ;

(உ) சட்ட நீதிமன்றம் ஒன்றினால் ஏதேனும் குற்றவியல் தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்படுதலாகாது ;

(ஊ) பேரவையினால் ஏதேனும் உயர் தொழில்சார் துர்நடத்தைக்கான தண்டிக்கப்பட்டுள்ள ஆளொருவராக இருத்தல் ஆகாது ;

5. பதிவாளரின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் -

(அ) பேரவைக்கான செயலாளராக சேவையாற்றுதல் ;

(ஆ) பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவத் தொழிலர்களை பதிவுசெய்வது தொடர்பில் எழுத்திலான மற்றும் வாய்மொழி மூல பரீட்சைகளை நடாத்துதல் உட்பட பேரவையின் அலுவல்களை முகாமை செய்தல் ;

(இ) பேரவை சார்பில் கடிதத் தொடர்பு வேலை யாவற்றையும் நிறைவேற்றுதல் ;

(ஈ) பேரவையின் நிதிசார் விடயங்களுக்கு உதவுதல் ;

(உ) பேரவையின் இலச்சினையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆயுர்வேத மருத்துவத் தொழிலர்களின், ஆயுர்வேத மருந்தியலாளவர்களின் மற்றும் ஆயுர்வேத தாதிகளின் பதிவேடுகளைப் பராமரித்தல் ;

(எ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலும் மற்றும் அத்தகைய கூட்டங்களின் நடவடிக்கை பற்றிய கூட்டறிக்கையைப் பதிவுசெய்தலும் பேணுதலும் ;

(ஏ) பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவத் தொழிலர்களின் ஒழுக்காற்றுக் கருமங்கள் மீது பேரவையின் முடிபுகளை அறிவித்தலும் அத்தகைய முடிபுகளை நிறைவேற்றுதலும் ;

(ஐ) பேரவையின் பணியாட்டொகுதி மீது முகாமை மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ; அத்துடன்

(ஒ) பேரவையின் குறிக்கோள்களையும் பணிகளையும் மேம்படுத்துவதில் பேரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதான அத்தகைய வேறு பணிகளை நிறைவேற்றுதல்.

6. (1) பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நாளாந்த பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்ட விளம்பரம் ஒன்றின் மூலம் கோரப்படுதல் வேண்டும்.

(2) இயைபான பதவிக்கு மிகவும் பொருத்தமான தேர்வுவிழைநர் பரீட்சார்த்தியில் தெரிவு பின்வருவோரைக் கொண்டுள்ள நேர்காணல் சபையினால் நிறைவேற்றப்பட்ட, கட்டமைக்கப்பட்ட நேர்காணல் ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும் :

(அ) நேர்காணல் சபையின் தவிசாளராகச் சேவையாற்ற வேண்டியவரான ஆயுர்வேத மருத்துவப் பேரவையின் தவிசாளர் ;

(ஆ) அத்தகைய பேரவையின் உறுப்பாண்மையிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவப் பேரவையின் இரண்டு உறுப்பினர்கள் ;

(இ) உதவி ஆணையாளர் பதவி வரிசையில் இருக்க வேண்டியவரான ஆயுர்வேத திணைக்களத்தின் சிரேட்ட அலுவலர்.

(3) நேர்காணல் சபையானது, பதிவாளராக நியமிக்கப்பட வேண்டிய பேரவைக்கான தேர்வுவிழைநர் ஒருவரை விதந்துரைத்தல் வேண்டும்.

7. பேரவையானது, பேரவைக்கான பதிவாளராக நேர்காணல் சபையினால் விதந்துரைக்கப்பட்ட தேர்வுவிழைநரை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவர் அமைச்சரினால் தீர்மானித்தவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

8. பதிவாளரின் பதவிக் காலமானது மூன்று வருடங்கள் காலப்பகுதி ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இரண்டாவது காலப்பகுதிக்கு மீள நியமிக்கப்படலாம்.

9. பதிவாளரின் பதவியானது -

(அ) அவர் அறுபது வயதினை எய்துவதன் மேல் அல்லது அவரது சேவைக்காலம் காலாவதி ஆவதன் மேல் ;

(ஆ) அவரது இறப்பின் மேல் ;

(இ) பேரவையின் தவிசாளருக்கு எழுத்தில் முகவரியிடப்பட்ட பதிவின்மேல் ;

(ஈ) கடுமையான முறையில் கடமை தவறுதல் அல்லது பாரதூரமான துர்நடத்தை காரணமாக அல்லது இயலாமை காரணமாக பேரவையினால் அவரது பதவி அகற்றப்படுதவதன் மேல் ;

(உ) அவரை, அவரது பதவியிலிருந்து அகற்றுவதற்காக பேரவையின் உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்டு பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்மேல் பதவி வெற்றிடமாதல் வேண்டும்.

*10*. பதிவாளர் பதவியானது *9* ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காக வெற்றிடமானவிடத்து பேரவையானது, சட்டத்தின் *19(1)(அ)* ஆம் பிரிவின் கீழ் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரை நியமிக்கும் வரை பதிவாளராகச் செயலாற்றுவதற்கு பேரவையின் உறுப்பினர்களில் எவரையும் நியமித்தல் வேண்டும்.

*11*. எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் ஒருப்பாட்டுடன் காலத்திற்குக் காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பேரவையின் பதிவாளருக்கு ஊதியமளிக்கப்படலாம்.

**ஆயுர்வேத மருத்துவப் பேரவையின் அலுவலர்களும் சேவையாளர்களும்**

*12*. பேரவையின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான கட்டளைக்கல் மற்றும் அவர்களது பதவி உயர்வுகள், பதவி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன பேரவையினால் தயாரிக்கப்படும் அந்தந்த பதவிக்கான இயைபான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க (ஆ. சே. தி.) இருத்தல் வேண்டும்.

*13*. பேரவையின் அலுவலர்களும் சேவையாளர்களும் எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஊதியமளிக்கப்படலாம்.

*14*. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக -

"ஆயுர்வேத மருத்துவத் தொழிலர்" என்பது, பேரவையினால் பேணப்படும் பொதுப்பதிவேட்டில் அல்லது விசேட பதிவேட்டில் அப்போதைக்குப் பதிவுசெய்யப்படுகின்றதான ஆயுர்வேத மருத்துவத் தொழிலர் எனப் பொருள்படும் ; அல்லது

"பேரவை" என்பது, *1961* ஆம் ஆண்டின் *3* ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் *11* ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவப் பேரவை எனப் பொருள்படும்.

EOG *03-0008*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.